மேலும், திருச்சியிலே கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையிலே சிதம்பரநாதன் அவர்களுக்கும், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கும், இராமநாதபுரத்திலே Rebel முத்துராமலிங்கம் அவர்களுக்கும் திருவுருவச் சிலைகள் அமைத்து, தன்னுடைய பொற்கரங்களால் திறந்து வைத்துப் பெருமை சேர்த்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்தப் பேரவையிலே பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, திருவாரூரிலே மனுநீதிச் சோழனுக்கு நினைவு மண்டபம், கடலூரிலே சகஜானந்தா அவர்களுக்கு மணிமண்டபம், திண்டுக்கல்லிலே ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோருக்கு மணிமண்டபம், சென்னையிலே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் கோயம்புத்தூரிலே நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணிமண்டபம் ஆகியவற்றை அமைத்திட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்; அவர்கள் புகழ் என்றும் நிலைக்க உத்தரவிட்டவர்கள் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த வழியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

நல வாரியம்

***4481—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2017 பிப்ரவரி 1]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் கண்ணியத்திற்குரிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972-ன்கீழ் தோட்டத் தொழிலாளர்கள், தொழிலாளர் நல வாரியத்திற்கு உறுப்பினர்களுக்கான சந்தாத் தொகையை செலுத்தி இந்நல வாரியத்தால் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகளைப் பெற்று வருகின்றனர். ஆகவே, தோட்டத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் தொழிலாளர் நல வாரியம் மூலமாகவும் நன்மைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைப்பது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் முன்னேறுகின்ற வகையிலே நல்ல திட்டங்களை அளித்து, இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும் தமிழக மக்களின் மனதில் நீங்காமல் நிறைந்திருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

புரட்சித் தலைவர் அவர்களுக்குப் பிறகு இந்தக் கழகத்தை இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய கட்சியாக உருவாக்கியவர்

அம்மா. அவர்களுக்குப் பிறகு கழகத்தை வழிநடத்தும் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி வால்பாறையில் சுமார் 64 எஸ்டேட்டுகளில் 50,000-க்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். இவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவும், மேம்பாடு அடையவும், அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடவும், தோட்டத் தொழிலாளர் நல வாரியம் அமைக்க அம்மாவின் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், இத்தொழிலாளர்கள் அமைப்பு ரீதியான தொழிலாளர்கள் ஆவர். தோட்டத் தொழிலாளர்களுக்கு 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளின்கீழ் குடியிருப்பு வசதி, மின் வசதி, மருத்துவ வசதி, குழந்தைகள் காப்பகம், தொழிலாளர் குழந்தைகளுக்கு கல்வி வசதி மற்றும் உணவகம் ஆகிய வசதிகளை நிருவாகம் அளிக்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதிச் சட்டம், பதிவு செய்யப்பட்ட தோட்ட நிறுவனங்களுக்குப் பொருந்தும். ஆகவே, சட்டரீதியாகவும் மற்றும் தொழிலாளர் நல வாரியம் மூலமாகவும் தோட்டத் தொழிலாளர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைப்பது தொடர்பான கருத்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

2017 பிப்ரவரி 1]

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இந்தப் பிரச்சினையை உடனடியாகப் பரிசீலனை செய்து, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

39—

பேருந்து வசதி

***3199—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, செய்யூரிலிருந்து கல்பாக்கம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய இமயம், தமிழர்கள் இதயம், அளவற்ற அருளாளர், நிகரற்ற அன்பாளர், பன்மொழி வித்தகர், பார்புகழ் தலைவர், பேரறிவு, பேராற்றல் இவை அனைத்தின் மொத்த வடிவம் ஒருவர், அவர்தான் 8 கோடி தமிழர்களின் மூலமந்திரம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அம்மாவிற்காக தன்னையே தந்த தியாக தீபம், கருணைக் கடல், எங்கள் தியாகத் தலைவி, சின்னம்மா அவர்களை வணங்கி எனது பதிலைப் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) செய்யூர்-கல்பாக்கம், வழி வீரம்பாக்கம், கூவத்தூர், கடலூர் கிராமம் தடத்தின் நீளம் 34 கி.மீ. ஆகும். இத்தடத்தில் நகரப் பேருந்து ஒன்றின்மூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலத்திற்கு புதிய வழித்தடங்கள் ஒதுக்கீட்டின்போது, மாண்புமிகு இதய தெய்வம்